அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 344

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1986, செப்டெம்பர் 30 ஆந் தேதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

அமய அடிப்படை மீது நியமனங்கள்

அமய நியமனங்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 11 பிரிவு 1.7 இல் விதித்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் ஏற்பாடுகளுக்கு தங்களுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன்.

> "தற்காலிக அல்லது நிரந்தர பதவியொன்றுக்கு அவசர விடயமாக அமய நியமனம் செய்யப்பட வேண்டியதாகவிருந்தால் அல்லது நிரந்தர பதவி வகிப்பவர் ஒருவர் வராமலிருக்கையில் அப்பதவியின் கடமைகளை மேற்கொள்வதற்கு பதிலீட்டு நியமனமொன்று செய்யப்பட வேண்டியதாகவிருந்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகுதியுடையவரே கருத்திற் கொள்ளப்பட வேண்டும்."

02. இத் தேவைப்பாடு கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதை அவதானிக்கவும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.